தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.07.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 3004/F/2025**

திரு.K.சுகவனம் -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியரகம்,
கிருஷ்ணகிரி - 635 115.

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 14.05.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. அவரது அங்கீகாரம் பெற்ற திரு.V.குமார், தலைமை உதவியாளர் / துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் இன்று (01.07.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திருமதி.இரா.புஷ்பா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ஏ)., தேசிய நெடுஞ்சாலைகள், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் நேரில் சமர்ப்பித்தார்.

2. மேலும், மனுதாரர் கோரிய தகவல்களை ந.க.எண்.1664/2024/கனிமம், 18.05.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்து அத்தகவலின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்

ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இவ்வாணையம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்தும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் ஏற்று இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். CP 3004/F/2025**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
   மாவட்ட ஆட்சியரகம்,
   கிருஷ்ணகிரி - 635 115

2. **திருமதி.ரா.புஷ்பா,**
   **(அப்போதைய பொதுதகவல் அலுவலர்)**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக
   உதவியாளர் (பொது),
   கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திரு.K.சுகவனம்,
எண்.35, பாபிசெட்டி இல்லம் ,
கௌர்ல சென்னப்ப செட்டி தெரு,
பர்கூர், கிருஷ்ணகிரி - 635 104.

**நகல்**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to File: RV/PA